# மரியாதை

2

## சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# வலிப்பு நோய் விலகியது

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

183. இப்பொழுது, இதோ ஒரு சீமாட்டி இருக்கிறார்கள், அவர்களை எனக்குத் தெரியாது, நான் அவர்களை என்னுடைய ஜீவியத்தில் ஒருபோதும் கண்டதேயில்லை. நாங்கள் இருவரும் தேவனுக்கு முன்பாக இங்கே நின்று கொண்டிருக்கிறோம், மரித்துப் போய் விழவும் முடியும், சரியாக இப்பொழுதே பக்கவாதம் தாக்கலாம். நான் கூட்டங்களில் அது சம்பவிப்பதைக் கண்டிருக்கிறேன். அது கூட்டங்களில் சம்பவிப்பதை எத்தனை பேர் எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? என்னை ஹிப்னாடிஸம் செய்வதற்காக அந்த ஆள் வந்து, அந்த இரவில் அவன் அங்கே மேலே பால்(கனி)...யில் உட்கார்ந்து கொண்டிருந்ததை எத்தனை பேர் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? அவன் அங்கே கீழே வந்து, என்னை ஹிப்னாடிஸம் பண்ணி, என்னை ஒரு நாயைப் போன்று குரைக்கச் வைக்கப் போவதாய் இருந்தான். பரிசுத்த ஆவியானவர் மறுபக்கம் திரும்பி, "பிசாசின் மகனே" என்றார். அவன் அந்த நேரம் முதற்கொண்டு பக்கவாதத்தினால் தாக்கப்பட்டான். அது ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு முன்பு நடந்ததாகும், பாருங்கள். அவர்கள் அவனை கட்டிடத்தை விட்டு வெளியே தூக்கிச் சென்றனர். உங்களால் தேவனோடு விளையாட முடியாது. நீங்கள் அதை விசுவாசித்தாக வேண்டும்.

184. ஒரு ஊழியக்காரர் ஒரு சபைக் கூட்டத்தினரைக் கொண்டு வந்தார், வலிப்பு நோயினால் அவதிப்பட்ட ஒரு பிள்ளையினிமித்தம் அவர்கள் தங்களுடைய தலையை தாழ்த்திக் கொண்டிருக்க வேண்டுமென்று நான் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன், அந்தப் பிள்ளை

தன்னுடைய நாவைத் தொடர்ந்து கடித்துக் கொண்டிருந்தது; அவர்கள் அதனுடைய வாயில் ஒரு குச்சியை வைத்திருந்தனர்... அல்லது, துணிகளைக் துவைத்துக் காயப் போடும் போது, அதை பற்றிப்பிடிக்க வைக்கும் கிளிப்போடு (clothespin), அதில் ஒரு துணியையும் வைத்து, அதனுடைய வாயில் வைத்திருந்தனர் அது ஆர்கன்ஸாஸிலுள்ள ஜோன்ஸ்பரோவில் நடந்த சம்பவமாகும். அவன் அவ்விதமாக இந்த நாவைத் தொடர்ந்து கடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தான், அப்போது மேடையிலேயே அந்தப் பிள்ளைக்கு சிறிது நேரம் உணர்விழப்பு ஏற்பட்டது. நான், "இப்பொழுது, நீங்கள் எல்லாரும் உங்களுடைய தலையை கீழே தாழ்த்தி இருங்கள்" என்று கூறி விட்டு, நான் ஜெபிக்கத் துவங்கினேன். அவர்களோ தங்கள் தலையைத் தாழ்த்தி வைக்கவில்லை. நான் தொடர்ந்து சுற்றிலும் நோக்கிப் பார்த்து, "உங்கள் தலையை உயர்த்தியிருப்பவர்கள், உங்களுடைய தலையை கீழே தாழ்த்தி விடுங்கள்" என்று கூறினேன்.

185. நான் ஜெபிக்கத் துவங்கினேன், அவர்களோ தங்களுடைய தலையைத் தாழ்த்தவில்லை. நான் சுற்றும் முற்றும் திரும்பிப்பார்த்தேன், அங்கே ஒரு ஆள் இவ்விதமாக தன்னுடைய தலையை வைத்துக் கொண்டு பின்னால் உட்கார்ந்து கொண்டிருந்தான், ஏறக்குறைய எட்டு அல்லது பத்து பேர் அவனோடு இருந்தனர், அல்லது அதற்கும் அதிகமான பேர் இருந்தனர். நான்,

“ஐயா, உம்முடைய தலையை கீழே தாழ்த்தி வையும்” என்றேன்.

அவன், “இது ஒரு பொது இடம், நான் அப்படி செய்ய வேண்டியதில்லை” என்றான்.

நான், “சரி, அப்படியானால், அது உம்மைப் பொறுத்தது” என்று கூறி விட்டு, “பிதாவே, அந்த மனிதனின் நிலையின் நிமித்தமாக இந்த அப்பாவி பிள்ளை அவதிப்பட அனுமதியாதேயும்” என்றேன்.

186. இது சரியா இல்லையா என்று ஆர்கன்ஸாஸிலுள்ள ஜோன்ஸ்போரோவில் இருக்கும் பழைமை நாகரீகமான வேதாகம வேளை கூடாரமாகிய ஜோன்ஸ்போரோ கூடாரத்தைச் சேர்ந்த ரிச்சர்ட் T. ரீட் (Richard T. Reed) அவர்களைக் கேட்டுப்பாருங்கள். லிட்டில் ராக்கிலுள்ள, 505, விக்டர் தெருவைச் சேர்ந்த G. H. பிரௌன் அவர்களைக் கேட்டுப் பாருங்கள், அவர் அங்கே இருந்தார்.

187. அந்த வலிப்பு நோய் அந்தப் பிள்ளையை விட்டு விலகியது, ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தைச் சேர்ந்த 28 பேர்... மேய்ப்பரும் அந்த எல்லா 28 பேரும் வலிப்பு நோயை வாங்கிக் கொண்டார்கள், அவர்கள் வாயில் நுரை தள்ளியபடி, சரியாக அங்கே சபையோர் இருந்த இடத்திலேயே தரையில் விழுந்தார்கள். நான் அறிந்துள்ள வரைக்கும், அவர்கள் இன்னும் அதை வைத்திருக்கிறார்கள். அவர்களில் அநேகர் வந்தார்கள், நான், “எனக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது, அது ஒரு தேவனுடைய சாபம், எனவே அது உங்களைப்

பொறுத்தது. கீழ்ப்படியாமலிருந்தவன் நீ தான். உனக்கு விசுவாசம் இல்லை என்றால், கூட்டத்தை விட்டு வெளியே போகவும், அதைச் செய்ய வேண்டாம் என்றும் நான் உன்னிடம் கேட்டுக் கொண்டேனே. இப்பொழுது, அது உன்னைப் பொறுத்தது. எனக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது; நான் அந்த பாவத்திற்காக ஜெபிக்க மாட்டேன். இல்லை, ஐயா. அது உன்னைப் பொறுத்தது" என்று கூறி விட்டேன்.

***செய்தி:*** ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை, ஏப்ரல் 28, 1956

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

இலையுதிர்காலமோ குளிர்காலமோ கூட, அது ஒரு பொருட்டல்ல, பாம்புகள் இன்னும் அவனுடைய கல்லறையிலிருந்து ஊர்ந்து சென்றவண்ணம் இருக்கிறது: ஒரு ஞாபகச் சின்னம்!

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: காலத்தால் பரீட்சிக்கப்பட்ட தேவனுடைய ஞாபகச் சின்னங்கள், ஆகஸ்டு 18, 1957, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

45. இப்பொழுது, ஒரு ஞாபகச் சின்னம் என்பது ஒரு-ஒரு மகத்தான காரியமாகும். நாம் ஞாபகச் சின்னங்களைப் பாராட்டுகிறோம்.

இந்த ஜீவியத்தில், அநேக மனிதர்கள், ஏதோவொரு விதமான ஞாபகச் சின்னத்தை தங்களுக்கு பின்னே விட்டுப்போக முயற்சித்திருக்கிறார்கள். ஏறக்குறைய எல்லா மனிதருமே அதைச் செய்ய விரும்புகிறார்கள்.

தங்களுடைய கல்லறையில் (graveyard) ஒரு மகத்தான அடையாளச் சின்னத்தை வைக்கிறார்கள். அதெல்லாம் சரிதான். நிச்சயமாக. நான் அதைப் பாராட்டுகிறேன். அது-அது சரிதான். பிறகு அநேகர் மகத்தான தேவாலயங்களை கட்ட முயற்சிக்கிறார்கள்.

46. நான் இப்பொழுது குறிப்பிட விரும்பும் ஒரு ஞாபகச் சின்னம் எதுவென்றால், அது

ஓஹியோவில் உள்ளது, அங்கே ஒரு கடவுள் நம்பிக்கையற்ற நாஸ்திகன் இருந்தான். அவனுடைய பெயரை மறந்து விட்டேன்.

ஏதோவொரு இடத்தில் என்னிடம் அந்தப் படம் உள்ளது, நான் அங்கே வீட்டில் சேகரித்து வைத்திருக்கும் ஏதோவொரு இடத்தில் அது உள்ளது.

அவன் தன்னுடைய மரணத்துக்குப் பிறகு, தன்னுடைய காலை வேதாகமத்தின் மேல்வைத்து, *அந்த* விதமாக கீழே சுட்டிக்காட்டி, "மத மூடநம்பிக்கைகளுக்கு அப்பால், நவீன விஞ்ஞானத்தோடு மேலே" என்று கூறும்படியுள்ள ஒரு ஞாபகச் சின்னத்தை தனக்கு கட்ட விரும்பும் அளவுக்கு, அவன் கிறிஸ்தவத்துக்கு விரோதமாக மிகவும் உறுதியாக இருந்தான்.

அவன் மரித்துக் கொண்டிருந்த போது, "நான் தவறாக இருந்திருப்பேன் என்றால், பாம்புகள் என்னுடைய கல்லறையை விட்டு வெளியே ஊர்ந்து செல்லும்" என்றான். அவன் மரித்தபோது, அவர்கள் இன்னுமாக அந்தக் கல்லறைக்குள் மண்வாரியைக் கொண்டு மண்ணைப் போட்டுக் கொண்டிருக்கையில், அவர்கள் இரண்டு அல்லது மூன்று பெரிய விரியன் பாம்புகளைக் கொன்று போட்டார்கள்.

இன்று, சமீபத்தில் ஒரு ஊழியக்காரர் அந்தக் கல்லறைத் தோட்டத்தில், ஒரு புகைப்படத்தை எடுத்து, என்னிடம் காண்பிக்கும்படி கொண்டு வந்தார், நிறைய உள்ள அவருடைய... ஐச் சுற்றிலும் சங்கிலிகளின் மேல் தொங்கவிட்டுக் கொண்டிருந்தார்.

அந்தக் கல்லறைபூமி (graveyard) ஒரு அழகான இடமாகத்தான் இருக்கிறது, ஆனால் அவனுடைய மண்மேடோ ஒரு பாம்பின் மண்மேடாக இருக்கிறதே அல்லாமல் வேறு எதுவாகவும் இருக்கவில்லை.


இலையுதிர்காலமோ குளிர்காலமோ கூட, அது ஒரு பொருட்டல்ல, பாம்புகள் இன்னும் அவனுடைய கல்லறையிலிருந்து ஊர்ந்து சென்றவண்ணம் இருக்கிறது: ஒரு ஞாபகச் சின்னம்! **அதைப்போன்ற ஒரு ஞாபகச் சின்னத்தை நான் எப்பொழுதாவது கொண்டிருக்க, அல்லது உங்களில் யாராவது எப்பொழுதாவது கொண்டிருக்க தேவன் அனுமதிக்கவே மாட்டார்.**

எனவே அங்கே ஞாபகச் சின்னங்கள் இருக்கின்றன, ஆயினும், மகத்தான ஞாபகச் சின்னங்கள் தான்.

# நீங்கள் நிச்சயமாக இயேசுவுக்காக நேரத்தைக் கொண்டிருக்கத்தான் வேண்டும்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்




*செய்தி:* **மிக இருண்ட வேளை, அதற்குப் பிறகு இயேசு வருகிறார்**, நவம்பர் 14, 1955, பத்தி எண் 56

53. எனவே, அந்தக் குன்றின் பக்கமாக போய்க் கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டு, நான் அங்கு சென்றேன். நான், "இதோ பாரும் (say), சகோதரனே, நான் இங்கே ஒரு எழுப்புதலைத் தொடங்குகிறேன். நான் ஒரு பாப்டிஸ்டு ஊழியக்காரன்; நீர் வர வேண்டுமென்று நான்-நான் விரும்புகிறேன்" என்றேன்.

அவனோ, "மனிதனே, நான் சொல்வதைக் கேளும். உம்முடைய வேலையைப் பாரும் (Get next to yourself). இங்கே சுற்றிலும் மதத்திற்கு எங்களுக்கு நேரமில்லை. நாங்கள் கோழிக்குஞ்சுகளை வளர்க்கிறோம்" என்றான்.

நான், "சரி, பரவாயில்லை" என்றேன்.



ஆனால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அதிலிருந்து ஏறக்குறைய ஐந்து நாட்களில், உங்களுக்கு தெரியுமா, அந்த மனிதனை வெளியே புதைக்க அவர்கள் நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. அந்நேரத்திலிருந்து ஏறக்குறைய ஐந்து நாட்களில் அவன் மரித்துப் போனான். எனவே நீங்கள் நிச்சயமாக இயேசுவுக்காக நேரத்தைக் கொண்டிருக்கத்தான் வேண்டும். கட்டாயம் அதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் எவ்வளவு பிஸியாக இருந்தாலும் அது ஒரு பொருட்டேயல்ல, நீங்கள் எந்த விதமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தாலும், கிறிஸ்துவுக்காக நேரத்தை எடுத்துக்கொள்வது சிறந்தது.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.)*

பிசாசு கூற முற்படுகின்ற
எந்த ஒரு தீய காரியத்துக்கும்
செவி கொடுக்காதீர்கள்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

பிசாசு கூற முற்படுகின்ற எந்த ஒரு தீய காரியத்துக்கும் செவி கொடுக்காதீர்கள். பாருங்கள்? பிசாசு ஏதாவதொன்றைக் காண்பித்து, அல்லது தீதான எதையாவது, கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர் ஒருவரைக் குறித்து உங்களிடம் கூறினால், அதை விசுவாசிக்காதீர்கள். ஏனெனில் நீங்கள் அதை விசுவாசிக்கத் தொடங்கின உடனே, உங்கள் அனுபவத்தை கெடுத்துக் கொள்கிறீர்கள்.

கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினரில் ஒருவர் தீதான ஒன்றை செய்வதை நீங்கள் கண்டால், அதை யாரிடமும் சொல்லாதீர்கள். அந்த அங்கத்தினரிடம் சென்று, அவரை மீண்டும் கிறிஸ்துவினிடம் கொண்டு வர முடியுமா என்று பாருங்கள். உங்களால் செய்ய முடியாமல் போனால், ஒரே ஒரு நபரிடம் கூறுங்கள், அல்லது அவரை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். வேதம் கூறியுள்ள விதமாக அதைச் செய்யுங்கள். பாருங்கள்?

யாராகிலும் ஒருவர், “சகோதரி இன்னார் அல்லது சகோதரன் இன்னார்” என்பாரானால் அவர் கூறின ஒரு வார்த்தையும் கூட நம்பாதீர்கள். அது போகும்படி விட்டு விடுங்கள். ஏனெனில் அது உங்களை துண்டு துண்டாக கிழிக்க முயற்சி செய்யும் பிசாசு என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவன் உள்ளே வருவதை கவனியுங்கள், ஏனெனில் அவன் வருவான். நீங்கள் வீட்டின் எஜமான், விசுவாசம், அங்கு நின்று கொண்டிருக்கும்படி விட்டு விடுங்கள். அவன் கூறும் ஏதொன்றையும் ஏற்றுக்

கொள்ளாதீர்கள். இந்த ஜனங்கள் உங்களுடன் உன்னதங்களில் உட்கார்ந்து கொண்டு, தேவனுடைய ஆசீர்வாதங்களைச் சுற்றி ஒன்றாக ஐக்கியங் கொண்டு, மேசையின் அருகில் இராப்போஜனத்தில் பங்கு கொள்கின்றனர். பரிசுத்த ஆவியும் அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்பதற்கு சாட்சியாயிருக்கிறார். எனவே நாம் மிகவும் இனிமையாயும், தயவுள்ள இருதயம் கொண்டவர்களாயும், மன்னிக்கிறவர்களாயும், அன்புள்ளவர் களாயும் இருப்போமாக. மற்ற நபர் உங்களுக்கு விரோதமாக

தீதானவைகளைப் பேசினால், நீங்கள் அவரைக் குறித்து இனிமையானவைகளைப் பேசுங்கள். அப்பொழுது உங்களிடம் இன்னும் எவ்வளவு அதிகமான இனிமை வருகிறதை கவனியுங்கள். பாருங்கள்? அது உண்மை. தீமைக்கு நன்மை செய்யுங்கள், பகைக்கு அன்பை செலுத்துங்கள்.

*ஒரு மேம்பட்ட புலன், டிசம்பர் 27, 1959, பத்தி எண் 35–37*

---

யாரையும் நியாயந்தீர்க்காதீர்கள். ஒவ்வொருவரையும் நேசியுங்கள். உங்களுடைய இருதயத்திலிருந்து

உங்களால் நேசிக்க முடியவில்லையென்றால், அப்படியானால் கிறிஸ்து உங்களோடு இல்லை.

**பிசாசியல் – மதச் சார்பான மண்டலம், ஜுன் 9, 1953, பத்தி எண் 219**

★★★★★

நீங்கள் ஒருவருக்கொருவர் நகைச்சுவை மற்றும் ஏளனம் கூட நீங்கள் செய்யக் கூடாது. நீங்கள் பேசுகின்ற ஒவ்வொரு உபயோகமற்ற சொல்லுக்கும் தேவன் உங்களை கணக்கொப்புவிக்கச் செய்வார். அதை நீங்கள் அறிவீர்களா?



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: கேள்விகளும் பதில்களும் (COD 1:3), ஜனவரி 3, 1954, பத்தி எண் 136-149

II தீமோத்தேயு 2:16 இவ்வாறு இருக்கிறது.

**சீர்கேடான வீண் பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் (கள்ளப்போதகர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்.**

ஆம்! மேலும், "சீர்கேடான வீண் பேச்சு" என்பதைக் குறித்து நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். "சீர்கேடான – சீர்கேடான வீண் பேச்சுகளுக்கு விலகியிரு, அவைகள் அதிகரிக்கும்".

இப்பொழுது, முதல் காரியமாக "சீர்கேடான வீண்பேச்சு, அவைகள் அதிகரிக்கும்." இப்பொழுது, பழையதாக இருக்கிற எதுவும் - வீண்பேச்சு பேசிக்கொண்டேயிருக்கும். வேதாகமம் கூறுகிறது - இயேசு, "உங்கள் 'ஆம்' என்பது 'ஆம்' என்றும் உங்கள் 'இல்லை' என்பது 'இல்லை' என்றே இருக்கட்டும், இதற்கு மிஞ்சினது பாவத்தினால் வருகிறதாயிருக்கும்," என்றார். **நீங்கள் ஒருவருக்கொருவர் நகைச்**

**சுவை மற்றும் ஏளனம் கூட நீங்கள் செய்யக் கூடாது.** **நீங்கள் பேசுகின்ற ஒவ்வொரு உபயோகமற்ற சொல்லுக்கும் தேவன் உங்களை கணக்கொப்புவிக்கச் செய்வார்.** அதை நீங்கள் அறிவீர்களா? **ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும் நீங்கள் கணக்கு கொடுக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது.** **ஆகவே எப்படிப் பட்ட ஒரு ஜனமாக நாம் இருக்க வேண் டியவர்களாகவுள்ளோம்?** வெளிப்படையாக, உறுதியாக, அன்புமிக்க, பாசமிக்க, முட்டாள் தனம் மிக்க ஒரு குழுவாக இல்லாதவர்கள், எப்பொழுதுமே...

கவனியுங்கள். நீங்கள் அந்த நபரை எடுத்துக் கொள்வீர்களானால் இன்று ஆரம்பிக்க விருக்கிற... ஐயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவ னாகிய நான், என்னையே என்னுடைய சொந்த சுபாவத்தையே கவனித்திருக்கிறேன். ஒவ்வொரு - ஒவ்வொரு முறையும் கிண்டலும் நையாண் டியும் செய்வதுண்டு. என்னுடைய மனைவியும் கூட, “இப்பொழுது, பில்...!” என்று கூறுவாள்.

நான், “அது பரவாயில்லை; தேனே” என் பேன். அவள் கூறுவாள், நான் பிள்ளைகளுடன் நெருக்கித் தள்ளி முட்டி மோதிக் கொண்

டிருப்பேன்... நான் கூறுவேன்... அவர்களிடம் நையாண்டி செய்து மற்றும் ஏதாவதொன்றைக் கூறுவேன், "நல்லது இப்பொழுது, உனக்குத் தெரியுமா, கெண்டக்கியிலிருந்து மூன்று மகத்தான மனிதர் வந்துள்ளனர்."

"அது யார்?"

"நல்லது, ஆபிரகாம் லிங்கன்"

"சரி"

"டானியேல் பூன்"

"ஹூ- ஹூம்"

"அப்புறம் உன் தந்தை." அதைப் போன்ற ஒன்று.

அதற்கு அவள், "இப்பொழுது, பில், இதோ மறுபடியும் நீர் அதைச் செய்கிறீர்" என்பாள். நான் ஏதாவது ஒரு மறைவிடத்தில் சென்று, "கர்த்தாவே என்னை மன்னியும், அந்த விதமாக கூற நான் விழையவில்லை. எனக்கு ஏதாவதொன்றைச் செய்யும்; நான் அதை விட்டு கடந்து வரச் செய்யும்" என்பேன். பாருங்கள்?

ஆகவே ஒவ்வொரு நாளும் நான் - நான் அதைச் செய்தால்... இப்பொழுது இக்காலை பின்மாற்றம் என்ற வார்த்தையைக் குறித்து நாம்

பேசிக் கொண்டிருந்தோம். **நீ அதைச் செய்தால் நீ பின்மாற்றத்திலிருக்கிறாய். ஆம், ஐயா! நீ மனந்திரும்பியாக வேண்டும்.** அது சரியல்லவா? இப்பொழுது, நீங்கள் உலகத்திற்குள் சென்று இதை மற்றும் அதை செய்தீர்கள் என்று நான் கூற விழையவில்லை, ஆனால் ஏதோ ஒன்றை நீங்கள் செய்துள்ளீர்கள். நீங்கள் இயேசு கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கும்படியாக அநுதினமும் மனந்திரும்பி சாகவேண்டும். ஆதலால் கிறிஸ்து இயேசுவுக்குள் ஜீவிக்க ஒவ்வொரு நாளும் - ஒவ்வொரு நாளும், நீங்கள் ஒவ்வொரு நாளும் மரிக்க வேண்டும்.

நான் ஏதாவதொன்றை காணும் போது... தவறாயிருக்கின்ற காரியங்களை அநேக முறைகள் நான் செய்கிறேன். நான் வெளியே செல்வேன், யாரோ ஒருவர் ஏதோ ஒன்றை அல்லது மற்றதைக் கூறுவார், அதைக் குறித்து ஒரு சிறிய நகைச்சுவையை நான் ஒருக்கால் கூறுவேன். யாரோ ஒருவர் கூறுவார்... மோச மான ஒன்றல்ல; **இப்பொழுது, கிறிஸ்தவர் கள் இழிவான நகைச்சுவைகளைக் கூறுவார்கள் என்று நான் நம்புவ தில்லை. இல்லை ஐயா! இல்லை ஐயா!**

**அப்படியானால் அவர்கள் கிறிஸ்தவர்களே அல்ல என்று வேதம் கூறுகிறது.** அந்த பழைய சீர்கேடான காரியங்கள் போன்றவை, நகைச்சுவைகள், அரட்டைகள், மற்றும் அதைப் போன்றவைகளை விட்டுவிடுங்கள் என்று கூறுகிறது. **இல்லை, அந்த விதமான காரியங்களை கிறிஸ்தவர்கள் கூறமாட்டார்கள்; கிறிஸ்தவர்கள் தூய்மையான எண்ணங்களைக் கொண்டவர்கள் ஆவர்.**

ஆனால் நீங்கள் கவனிப்பீர்களானால், எப்பொழுதாவதொரு முறை நீங்கள் ஒரு மனிதனை... இன்று அவன் ஒரு சிறு நகைச்சுவையைக் கூறுவான். ஆகவே நல்லது, அது சரி என்று நினைத்துக் கொள்வான், அதை அவன் அப்படியே விட்டுவிட்டு அதைக் குறித்து ஒன்றும் சிந்திக்கமாட்டான். அடுத்த நாள் அவன் இரண்டு சிறிய நகைச்சுவைகளைக் கூறுவான். பாருங்கள். ஆகவே அடுத்த காரியம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா, நீங்கள் வேறெதாவதொன்றைச் செய்து கொண்டிருப்பீர்கள். ஆகவே முதலாவது காரியம் என்னவென்பதை நீங்கள் அறிவீர்களா, அது திரும்பவுமாக அந்த அதே பழைய காரியத்திற்கே கொண்டு சென்று விடுகிறது. அது சரியா? **அந்த காரியத்தை**

**விட்டு அகன்று செல்லுங்கள். அதை விட்டு விலகுங்கள்! சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிருங்கள்.**

யாரோ ஒருவர் வந்து... ஒரு சிறிய உதாரணத்தை நான் உங்களுக்கு அளிக்கிறேன். “திருமதி டோ, அது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? நான் உங்கள் கணவரைக் கண்டேன். என்னவென்று நான் உங்களுக்கு கூறுவேன். நீங்கள் மாத்திரம்...” பாருங்கள் ஒரு...



இப்பொழுது நான் நினைப்பதென்னவென்றால்... “**அதை நான் கேட்க விரும்பவில்லை!**” என்று கூறி, அப்படியே சென்று கொண்டிருங்கள். அதைக் குறித்து கவனம் செலுத்த வேண்டாம், அவர்கள் அதை நிறுத்தி விடுவர். அது சரி.

“நல்லது என்ன என்று உங்களுக்கு தெரியுமா சகோதரியே? சகோதரனுக்கு என்ன ஆயிற்றென்று நான் உங்களுக்கு கூறுவேன்.”

சகோதரி மட்டுமல்ல, ஆனால் சகோதரனும் கூட. பாருங்கள்.

"சகோதரனே, என்ன நடந்தது என்று நான் உங்களுக்கு கூறுவேன். நாம் இந்த பிரசங்கியை மாத்திரம் அப்புறப்படுத்தி விட்டால், நாம் இதைச் செய்வோமானால், அல்லது இதை நாம் செய்வோமானால்" ஓ, ஓ! - அந்த காரியத்தை விட்டு-விட்டு- விட்டு விலகுங்கள்.



உங்கள் மேஜையின் மேல் ஒரு அருமையான சிறு காரியத்தை நீங்கள் வைத்தி ருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன், சிறிது காலத்திற்கு முன்னர் ஃபிளாரிடாவில் அந்த சிறு காரியத்தை நான் கண்டேன். அது மூன்று சிறிய குரங்குகள்; அதில் ஒன்று தன் கைகளை தன் கண்களின் மேல் வைத்திருந்து,

**"தீமையானதைப் பார்க்காதே" என்று கூறினது; இன்னொன்று விரல்களை வைத்து "தீமை யானதற்கு செவிசாய்க்காதே" என்று கூறி னது; இன்னும் ஒன்று தன்னுடைய வாயின் மேல் தன் கையை வைத்து, "தீமையானதை பேசாதே" என்று கூறினது. அது ஒரு அருமை யான காரியம் என்று நான் நினைக்கிறேன்.** *நீங்கள் அவ்வாறே நினைக்கிறீர்கள் அல்லவா? ஆம், ஐயா! ஓ, என்னே! அது ஒரு மிக அருமையான காரியம்.*

**உங்கள் மனதை மாத்திரம் தூய்மை யாகவும் கிறிஸ்துவின் மீதும் வைத்தி ருங்கள்.** *நீங்கள் அப்படியே, "நல்லது, இப் பொழுது..." என்று கூற முடியாது. இப்பொழுது பாருங்கள்,* **நீங்கள் கவனிக்கவில்லை யெனில், நீங்கள் உங்களையே ஒரு இடத்திற்கு கொண்டு சென்று விடுவீர் கள்,** *நீங்கள் அதைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருப்பீர்களானால்... நீங்கள் அதை சிந்திக்காதீர்கள்... இப்பொழுது அந்த தவறை நீங்கள் செய்ய முடியாத விதத்தில் உங்களால் மிக பரிபூரணமாக இருக்க முடியாது. ஏனெனில் நீங்கள் செல்ல மாட்டீர்கள் என்பதால் அந்த*

வழியாக நீங்கள் எப்பொழுதாவது செல்வேன் என்று நீங்கள் நினைப்பீர்களா. இல்லை ஐயா! நீங்கள் பாவமில்லாதவர்கள் அல்ல, ஆகவே நீங்கள் இந்த புறமாக அல்லது அப்பக்கமாக நிச்சயமாக அவர்களுடைய பாதையில் சென்று விடுவீர்கள்.

ஆனால் கீழே அடித்து தள்ளப்பட்ட ஒரு மனிதன், அவன் ஒரு உண்மையான போர்வீரனாக இருப்பானானால் அவன் மறுபடியும் எழுந்து நிற்பான். “**கர்த்தாவே, நான் எழுந்து மறுபடியும் அதை முயற்சித்து பார்க்கட்டும்.**” ஆனால் ஒரு கோழையோ தன்னுடைய முதல் சிறிய தவறை அவன் செய்வதை பார்க்கையில் இன்று காலை நான் கூறின விதமாக அவன் இருப்பான்: அந்த மூட்டுப் பூச்சியும் தண்ணீர் பூச்சியும் மறுபடியுமாக நேராக தண்ணீருக்குள் ஊர்ந்து சென்று விடும். பாருங்கள்? அவனால் அதை தாங்க முடியாது.

ஆகவே **எல்லா பழைய அந்த சீர்கேடான வீண்பேச்சு, பேசிக்கொண்டே இருத்தல், பேசுதல் போன்றவற்றிலிருந்து விலகுங்கள்.** வீண்பேச்சு என்றால் “குழப்பம்” என்று அர்த்தம். ஆகவே வேதாகமம் “**...உங்கள் நடுவிலே சச்சரவுகளை**

**உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்"** என்று கூறுகிறது.

யாராவது ஒருவர், "*ஹூ-ஹூம்! ஹூ-ஹூம்*" என்று கூறுவாரானால். இப்பொழுது – இப்பொழுது, "**எப்படியிருக்கிறீர்கள்? மறுபடியும் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. உமக்கு நன்றி**" என்று மாத்திரம் கூறுங்கள். **அப்படியே சென்று கொண்டிருங்கள். அது தான் சிறந்த காரியம்.** *அவர்களை விலக்கி விடாதீர்கள். அவர்களை பார்த்து வைத்துக் கொள்ளுங்கள். அது எங்கு செல்கின்றது என்பதை நீங்கள் காண்பதால் நீங்கள் எந்த ஒரு கவனத்தையும் செலுத்த வேண்டாம்.*

★★★★★

# சகோ.பிரன்ஹாமுக்கு எதிர்த்து நின்ற வெறிபிடித்த மனிதன் கீழ்படுத்தப்படுதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: பதினோராவது கட்டளை, பத்தி எண் 4

அன்பைக் குறித்ததான என்னுடைய சில அனுபவங்களைக் குறித்த ஒரு தனிப்பட்ட சாட்சியை நான் உங்களுக்குக் கூற விரும்புகிறேன்: மக்கள் நினைப்பது போல என் வாழ்க்கை தெய்வத் திறனுடைய ஒன்றல்ல, அவ்வாறு இல்லை, அது அன்பு ஆகும், அது தான் முக்கியமான காரியமாகும், அது கிறிஸ்துவை நேசிப்பதாகும். அப்படி செய்யலாம் என்று கூறுவதல்ல, ஆனால் உங்கள் இருதயத்திலிருந்து அவரை அன்பு கூர்தல். தேவனுடைய அன்பின் பிரசன்னத்தில் மிகவும் கொடியதான பிசாசுகள் கீழ்ப்படுத்தப் பட்டதைை நான் கண்டிருக்கிறேன். துஷ்ட மிருகங்கள் அப்படியே படுத்துக் கொள்வதை நான்

கண்டிருக்கிறேன். அன்பு பயத்தை புறம்பே தள்ளும்.

அந்த இரவில் ஓரிகானிலுள்ள போர்ட்லாண்டில், அந்த வெறிப்பிடித்த மனிதன் என்னை எதிர்த்து நின்று, என்மீது எச்சிலை துப்பி என்னை சபித்ததை இன்றிரவு இங்கிருக்கின்ற உங்களில் சிலருக்கு நினைவிருக்கலாம். அநேக மேய்ப்பர்கள் பிரசங்க மேடையிலிருந்து ஓடிவிட்டனர். அவர்கள் அவனிடம் அதிக பயம் கொண்டிருந்தனர். அங்கிருந்த சிலர், காவல் துறையினர் அழைக்கப்பட வேண்டுமென்றும், அந்த மனிதனை வலுக்கட்டாயமாக அடக்கி அவனைக் கயிற்றால் கட்டி மறுபடியும் அவனை சிறைக்குள் அடைக்க வேண்டும் என்று நினைத்தனர். நான் அந்த மனிதனை வெறுப்பதற்குப் பதிலாக அவனை நேசித்தேன். "அந்த பரிதாப மனிதன்

என்னைக் காயப்படுத்த வேண்டும் என்று விரும்பவில்லை.... அது அந்த மனிதனுக்குள்ளிருக்கும் பிசாசு, அந்த பிசாசு தான் என்னை காயப்படுத்த விரும்புகிறான்.'' "அந்த மனிதன் ஒரு நேசிக்கின்ற குடும்பத்தையுடையவனாக இருக்கலாம், ஒன்று சேர்ந்து உணவு சாப்பிட, மற்றும் ஒரு நல்ல குடிமகனாயிருக்க விரும்புகிறவனாக இருக்கலாம். ஆனால் அவனுக்குள்ளிருக்கும் பிசாசு தான் இதைச் செய்கிறது'' என்று நான் நினைத்தேன். நான், "பாவம், அந்த சகோதரன்!'' என்று நினைத்தேன். அவன் என்னிடமாக அருகில் வந்து, "நீ தேவனுடைய மனிதனா அல்லது இல்லையா என்று நான் உனக்கு காண்பிக்கப் போகிறேன்!'' என்று கூறினான். நல்லது, நான் ஒன்றுமே

கூறவில்லை. நான் அவனை நோக்கிப் பார்த்து கொண்டிருந்தேன், அவ்வளவு தான். அந்த இடம் மிகவும் அமைதியாக இருந்தது. அப்பொழுது அந்த மனிதன், "புல்லில் இருக்கும் பாம்பே!" என்றான். நான் ஒன்றுமே கூறவில்லை. ஆனால் இதை நினைவில் கொள்ளுங்கள், நான் பயப்படவேயில்லை. ஏனெனில் நான் அங்கே தேவனுடைய அன்பைக் கொண்டவனாக அவனைச் சந்தித்தேன். அப்பொழுது அவன் என்னைத் தாக்க தன் கைமுட்டியை உயர்த்தின போது, நான், "சாத்தானே, அந்த மனிதனை விட்டு வெளியே வா" என்றேன், அப்பொழுது அவன் சுற்றிச் சுழன்று முகங்குப்புற விழுந்து, என் பாதம் அப்படியே தரையிலே அசையாதபடிக்கு அவன் அதைப் பிடித்துக் கொண்டான். என் நண்பர்களே பயப்படாதேயுங்கள்,

அதற்குப் பதிலாக அன்பை செலுத்துங்கள். இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள், நீ உரிமை கொண்டிருக்கிற நிலத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் நீ நிருபிக்கத்தக்கதாக பிசாசு உனக்குச் செய்வான், ஆனால் நீ தேவனை நேசிப்பாயானால் பயம் என்பதே உனக்கு இருக்காது, நீ எதை விசுவாசிக்கின்றாயோ அதன் பேரில் நிற்க முடியும், நீ தோற்கடிக்கப்படவே முடியாது.

★★★★★

அது என்ன? அவமரியாதை, கேலி செய்தல். அவர்கள் என்ன செய்கின்றனர் என்று அறியாமல் ஏதோ ஒன்றை செய்கின்றனர்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

# செய்தி: மரியாதைகள்

Jeffersonville, Indiana, USA
61-10-15E

---

88. சுமார் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு, நான் ஒரிகானில் இருந்தபோது, இரண்டு கத்தோலிக்க பெண் நிருபர்கள் அங்கு வந்தனர். அவர்கள் கத்தோலிக்கர்களை விட பிராடெஸ்டென்டுகள் அதிகம் பேர் என்னைக் கேலி செய்கின்றனர். இந்த பெண்கள் ஒருபத்திரிகைக்கு செய்தியளிக்க அங்கு வந்திருந்தனர்.

அவர்கள் வந்ததும், அவர்களுடைய ஆவியை நான் பகுத்தறிந்தேன். நான், ”சரி. என்னைப்பற்றி என்ன குற்றம் உங்கள் மனதில் வைத்திருக்கிறீர்கள்?’ என்று கேட்டேன். அந்த பெண் சிகரெட்டை எடுத்து பற்றவைக்கப் போனாள். நான், ”என் அறையில் உள்ள வரைக்கும் சிகரெட்டு பிடிக்க வேண்டாம்” என்றேன்.

89. அவள் அங்கு உட்கார்ந்து கொண்டு என்னை இப்படி ஏற இறங்கப் பார்த்து விட்டு பேச ஆரம்பித்தாள். அவள், ”உங்களை சில கேள்விகள் கேட்கவேண்டும்” என்றாள்.

நான், “கேள்” என்றேன்.

அவள், “நீங்கள் இந்த உருளும் பரிசுத்தர் கூட்டத்துடன் ஏன் தொடர்பு கொண்டிருக்கிறீர்கள்? நீங்களும் அவர்களில் ஒருவரா?” என்றாள்.

நான், “நானும் அவர்களில் ஒருவன் தான்” என்றேன்.

அவள், அதில் தேவபக்தியுள்ள ஏதாகிலும் உண்டு என்றா கூறுகின்றீர்கள்?”என்றாள்.

நான், ’கத்தோலிக்களாகிய நீ அதை நம்பமாட்டாய் என்றேன்.

அவள், ”நான் கத்தோலிக்கள் என்று உங்களுக்கு எப்படி தெரியும்?” என்று கேட்டாள்.

நான், எனக்குத் தெரியும். உன் பெயர் என்னவென்றும், நீயாரென்றும் என்னால் கூற முடியும்?” என்றேன். அவள் திகைத்துபோனாள்.

அவள், ”பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிற இப்படிப்பட்ட ஜனங்கள் பரலோகத்துக்கு செல்வதாக கூறுகின்றனரே! அவர்களுடன் பரலோகத்தில் இருக்க எனக்கு விருப்பமில்லை என்றாள்.

நான், ”அதைக் குறித்து கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. அப்படிப்பட்ட எண்ணம் கொண்டுள்ள வரைக்கும், நீ எப்படியும் அங்கு

இருக்கப்போவதில்லை. எனவே அதைக் குறித்து கவலைப்பட வேண்டாம்” என்றேன்.

90. நான் நின்று கொண்டு அவளுடைய முகத்தை உற்று நோக்கினேன். அப்பொழுது இரு சகோதரர்கள் கட்டிடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தனர். நான் அவளிடம், ’எனக்கு உன் மீது கோபம் எழவில்லை. ஆனால் நீ எந்த நிலையில் இருக்கிறாய் என்பதை உனக்கு அறிவிக்க விரும்புகிறேன். நீ ஏதாவது குற்றம் கண்டு பிடித்து பத்திரிகையில் எழுதலாம் என்னும் எண்ணத்துடன் இங்கு வந்திருக்கிறாய். நான் உன்னிடம் கூறுவதை நீ எழுதப் போவதில்லை.

உன் சொந்த கதையை ஜோடித்து நீ எழுதப் போகிறாய். நீ அப்படியே செய். ஆனால் ஒன்றை மாத்திரம் உன்னிடம் கூற விரும்புகிறேன். நீ வேண்டுமானால் அவதூறாக எழுது. ஆனால் நீ மரிக்கும் முன்பு என் சத்தம் உன் காதுகளில் தொனிக்கும். அப்படி நேராமலிருந்தால், நான் கள்ளத்தீர்க்கதரிசி என்று தீர்மானித்துக் கொள். நீ என்ன வேண்டுமானாலும் எழுது. அது உன்னைப் பொறுத்தது. நீ விரும்புவதை எழுத உனக்குரிமை அளிக்கிறேன். ஆனால் நீ மரிக்கும் முன்பு, என் சத்தம் உன் காதுகளில் உரக்க தொனிப்பதைக்

கேட்பாய். அதனால் உனக்கு ஒரு நன்மையும் ஏற்படாது. நீ போய் என்ன வேண்டுமானாலும் எழுது" என்றேன்.

91. அவள் சற்று நேரம் அங்கு நின்றாள். அவள், "சென்ற இரவு கூச்சலிட்டுக் கொண்டிருந்த அந்த முட்டாள் கூட்டத்தாரைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டாள். நான், அவர்களெல்லாரும் கிறிஸ்தவர்கள்' என்றேன்.

"கிறிஸ்தவர்களா?"

'நிச்சயமாக. அவர்கள் கிறிஸ்தவர்கள். அவர்கள் பரிசுத்த

ஆவியினால் நிறைந்த கிறிஸ்தவர்கள்" என்றேன்.

"அது பரிசுத்த ஆவி அல்ல" என்றாள் அவள்.

'அப்படியானால் எதை பரிசுத்த ஆவி என்றழைப்பாய்?" என்று கேட்டேன். அதைக்குறித்து அவள் கொண்டிருந்த கருத்தைப் பார்த்தீர்களா? 'உன்னிடம் ஒன்றைக் கூற விரும்புகிறேன்" என்றேன்.

அவள், அப்படிப்பட்ட கூட்டத்தாருடன் நான் தொடர்பு கொள்ள விரும்பவில்லை" என்றாள்.

நான், "நீ தொடர்பு கொள்ள விரும்பாததால் ஒரு பாதகமும் இல்லை. நீ தேவனுடனும்

பரிசுத்தவான்களுடனும் தொடர்பு கொண்டிருந்தால் தானே, இவர்களுடன் தொடர்பு கொள்ள விரும்புவாய்” என்றேன்.

அவள், ”வேதத்தில் கூறப்பட்டுள்ள பரிசுத்தவான்களா?” என்றாள்.

நான், ’ஆம், உன் ஆசீர்வதிக்கப்பட்ட கன்னி மரியாள். அவளை உன் தெய்வம் என்று அழைக்கிறாய் அல்லவா? அவளைத் தேவன் பரலோகத்தில் அனுமதிக்கும் முன்பு, அவள் பெந்தெ கொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவி பெற்று, தேவனுடைய வல்லமையினால்

ஆட்கொள்ளப்பட்டு, குடிபோதையிலிருந்த பெண்ணைப் போல் தடுமாற வேண்டியிருந்தது என்றேன்.

அவள், “அது சுத்தப் பொய்” என்றாள்.

92. நான், ’ஒரு நிமிடம் அமைதியாயிரு’ என்று சொல்லிவிட்டு, வேதாகமத்தைத் திருப்பி, “இங்குபார். இந்த புத்தகத்தில் இங்குள்ளது என்றேன். அவள் தலையைத் திருப்பிக் கொண்டாள். நான், ”தேவனுடைய வார்த்தையைப் படிக்காமல் புறக்கணிக்க நீ அகந்தை கொண்டிருக்கிறாய் என்றேன்.

பாருங்கள்? அவள் அதை அவமதித்தாள். நான், “மேசையின் மேலுள்ள உன் சிகரெட்டு பாக்கெட்டை எடுத்துக்கொண்டு நீ போகலாம். நீ ஒன்றை அறிய விரும்புகிறேன். நீ என்ன வேண்டுமானாலும் எழுது. ஆனால் நான் கூறுகின்ற கடைசி வார்த்தைகளை ஞாபகம் வைத்துக்கொள். நீ மரிக்கும் முன்பு இதை ஞாபகம்கொள்வாய் என்று கர்த்தருடைய நாமத்தினால் உரைக்கிறேன், என்றேன். அவள் ஒன்றுமே எழுதவில்லை. அது உண்மை. அவள் எழுதாமல் விட்டு விட்டாள்.

அது என்ன? அவமரியாதை, கேலி செய்தல். அவர்கள் என்ன செய்கின்றனர் என்று அறியாமல் ஏதோ ஒன்றை செய்கின்றனர். உண்மை.

★★★★★

**இப்படிப்பட்ட மக்களை அவர்கள்
பரிகசிக்கும் போது அவர்கள்
பரிசுத்த ஆவியை
தூஷிக்கிறார்கள், அது முற்றிலும்
மன்னிக்கப்பட முடியாத ஒன்றாகும்**



## செய்தி: **கேள்விகளும் பதில்களும்**, (COD 1:9), ஜுன் 28, 1959, பத்தி எண் 87


அப்படியானால் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் கிரியை நடப்பிக்கப்படுகிற மக்களை தூஷித்து ஏளனம் செய்கிற மக்களைக் குறித்தென்ன? இப்படிப்பட்ட மக்களை அவர்கள் பரிகசிக்கும் போது அவர்கள் பரிசுத்த ஆவியை தூஷிக்கிறார்கள், அது முற்றிலும் மன்னிக்கப்பட முடியாத ஒன்றாகும். நீ அந்த

மனிதனைக் குறித்துப் பேசவில்லை, அந்த மனிதனுக்குள் அசைவாடிக் கொண்டிருக்கும் ஆவியானவரிடம் தான் நீ பேசிக் கொண்டிருக்கிறாய். நாம் ஒருவருக்கொருவர் கனம் பண்ணி, ஒருவரையொருவர் நேசித்து, ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி, ஒவ்வொருவரைக் குறித்து நன்மையானதையே பேசுங்கள். இதைத் தான் நாம் செய்ய வேண்டும்.

**கேள்விகளும் பதில்களும்**, (COD 1:9), **ஜூன் 28, 1959, பத்தி எண் 87**

★★★★★

நான், “போ, உனக்கு
விருப்பமான அனைத்தையும்
சொல். அதனால் எனக்கு ஒரு
பாதகமுமில்லை. ஆனால் ஒரு
நாள் அதற்காக நீ வருந்த
நேரிடும்” என்றேன்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

# செய்தி: மரியாதைகள்

Jeffersonville, Indiana, USA
61-10-15E

---

55. என் வாழ்க்கையில் நான் கண்டவைகளை மற்ற நாடுகளில், உலகின் இதரபாகங்களில் நடந்தவைகளை நான் மணிக் கணக்காக சாட்சி கூற முடியும். ஆனால் அவைகளை கூறாமல் விட்டு விட்டு, நான் உங்களுக்கு அறிவுறுத்த முயன்றுகொண்டிருக்கும் கருத்தை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும்

மென்று விரும்புகிறேன் –அதாவது, நீங்கள் மரியாதை செலுத்த வேண்டும். கூட்டத்தில் வாலிபர்கள் உட்கார்ந்து கொண்டு, கேலி செய்து விட்டு, இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் தெருவில் விபத்திற்குள்ளாகி நசுங்கி சாவதை நான் கண்டிருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட ஆண்டில், ஒரு இடத்தில் கூட்டம் நடத்திக் கொண்டிருந்தபோது, வாலிபர்கள் அங்கு உட்கார்ந்து கொண்டு கேலி செய்ததையும், ஆறு மாதம் கழித்து அதே இடத்திற்கு நான் சென்றிருந்தபோது, ஏறக்குறைய அவர்கள் எல்லோருமே கொல்லப்பட்டு, அல்லது வியாதியால்

பீடிக்கப்பட்டதை நான் கண்டிருக்கிறேன். அது உண்மை. நீங்கள் அதற்கு மரியாதை தரவேண்டும்.

56. டென்னணியில் ஒரு இரவு, ஒரு பெரிய பாப்டிஸ்டு சபையில் பிரசங்கம் செய்துவிட்டு வெளியே வந்தபோது, கதவண்டை நான் சந்தித்த அந்த வாலிபப் பெண்ணை நினைவு கூருகிறேன். அன்றிரவு நடந்த கூட்டத்தில், அவள் கிறிஸ்துவினிடம் வரும்படி அழைக்க நான் ஏவப்பட்டேன். அப்பொழுது அவள் பரிகாசமாக என் முகத்தை நோக்கி சிரித்தாள். அவள் அந்த சபையின் மூப்பர்கள் ஒருவரின் மகள். அன்றிரவு அவள் கதவருகே

நின்று கொண்டு எனக்காக காத்திருந்தாள். நான் வெளியே வந்தபோது, அவள் என்னிடம், ”நீர் இப்பொழுதே இதை அறிய விரும்புகிறேன். மறுபடியும் என்னை அப்படிப்பட்ட தர்மசங்கடமான நிலையில் ஆழ்த்தவேண்டாம்.’ என்றாள்.

நான், “தேவன் உன்னை அழைத்தார்” என்றேன்.

அவள், ”மூடத்தனம்! நான் வாலிபமாயிருக்கிறேன். அதற்கு இன்னும் நிறைய நாட்கள் உண்டு. எங்கள் வீட்டிலுள்ள அனைவருக்கும் போதிய மார்க்கம் எங்கள் தந்தையிடம் உள்ளது’, என்றாள்.

"சகோதரியே, உனக்கு அது போதாது. ஒவ்வொருவரும் தனித்தனியே தங்கள் சொந்த மார்க்கத்தை கொண்டிருத்தல் அவசியம் என்றேன்.

அவள், "யாராகிலும் அதைக் குறித்து என்னிடம் பேச வேண்டுமானால், அறிஞர் ஒருவரைக் கொண்டு வருவேன். உம்மைப் போன்ற ஒருவரையல்ல" என்றாள்.

நான், "போ, உனக்கு விருப்பமான அனைத்தையும் சொல். அதனால் எனக்கு ஒரு பாதகமுமில்லை. ஆனால் ஒரு

நாள் அதற்காக நீ வருந்த நேரிடும்” என்றேன்.

57. சிறிது காலம் கழித்து, அந்த பட்டினத்தின் வழியாய் நான் செல்ல நேர்ந்தது. அவள், உட்பாவாடை கீழே தொங்கிக் கொண்டு, கையில் ஒரு சிகரெட்டுடன் நடந்து வந்து, எனக்கு விஸ்கி வேண்டுமா என்று கேட்டாள். அது தான்! இதுவே அவளுடைய சாட்சி. அவள், ’அன்றிரவு கிறிஸ்துவினிடம் வரும்படி என்னை நீங்கள் அழைத்தது ஞாபகமுள்ளதா? அது முற்றிலும் உண்மை. அன்றிரவு தேவனுடைய ஆவியானவர் என்னுடன் போராடி, நான் அவரிடம் வரும்படி

எவ்வளவோ வற்புறுத்தினார். அன்று முதல் என் தாயின் ஆத்துமா நரகத்தில் அப்பத்தைப் போல் எண்ணெயில் பொறிக்கப்பட்டு, அதை பார்த்து சிரிப்பதை என்னால் காணமுடிகிறது" என்றாள். அதுதான் நடந்தது, பாருங்கள்.

நீங்கள் தேவனுக்கு மரியாதை செலுத்த வேண்டும். சகோதரனே, அதை நீ செய்யவேண்டும். நீ செய்ய வேண்டும். அவ்வளவுதான். யேசபேல் அவமதித்தாள்.

★★★★★

# மனைவியின் வளர்ப்புத் தந்தை உடனே மரித்துப்போதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?, ஜுன் 30, 1963, பத்தி எண் 103–104

அண்மையில் ஒருவர் இவ்வாறு கூறுவதைக் கேட்டேன்... அவர் ஒரு விதமான... அவர் ஹேராப்பின் வளர்ப்பு தந்தை. அவரிடம் நான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்து சொல்லிக் கொண்டிருந்தேன். அவர், “உன்னிடமுள்ள கூட்டத்தாரைத் தவிர வேறு யார் இதை நம்புவார்? இன்னார் இன்னார் இந்த பட்டினத்திலேயே மிகவும்

மோசமான ஒரு வர்த்தகர் தாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதாக என்னிடம் கூறட்டும், நான் நம்புவேன்” என்றார்.

நான், “நீங்கள் கவலைப்படவேண்டாம். அவர் ஒருக்காலும் அப்படி கூறமாட்டார்” என்றேன். அவர் தேவனற்றவராய் உடனே மரித்துப் போனார்.

நீங்கள் செய்வதைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள். நீங்கள் பேசுவதைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு சுவிசேஷத்திற்கு தகுதியாயுள்ள வாழ்க்கை அவசியம். அது உண்மை!

உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?, ஜூன் 30, 1963, பத்தி எண் 103–104

★★★★★

# தேவன் தமது வார்த்தையை எவ்வளவு கவனமாகப் பாதுகாக்கிறார் என்பது மிகவும் அற்புதமல்லவா?





வில்லியம் மரியன் பிரன்ஹாம்

8. இங்குள்ள வேறு யாருக்காவது ரபீலாசனைத் தெரியுமா? ஒரு சிலருக்கு மாத்திரமே. அப்படியானால், இதை கூற விரும்புகிறேன். அவருக்கு ஒரு விசித்திரமான காரியம் சம்பவித்தது. அவர் நல்ல பிரசங்கி, அருமையான சகோதரன். அவர் பெரிய பொறுப்பு ஒன்றும் பெற்றிருக்கவில்லை. அவருடைய ஊழியம் அப்படிப்பட்டதல்ல. **ஆனால் அவருக்கு அளிக்கப்பட்டிருந்த பொறுப்பில் அவர் உண்மையாய் வாழ்ந்தார் என்று நானறிவேன். அது தான் முக்கியமானது.**

9. அவர் பிரசங்க ஊழியத்தின் மூலம் போதிய பணம் சம்பாதிக்கவில்லையென்று அவருடைய மனைவி கருதினாள். எனவே அவர் வேலை தேட வேண்டுமென்று கூறினாள். அவர் எந்த நேரமும் வேதாகமத்தையே படித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் அவளுக்கு அவர் மேல் அதிக கோபமூண்டது. அவள் அவருடைய மடியிலிருந்த வேதாகமத்தை பிடுங்கி, அடுப்பில் தீ மூட்டி அதை தீயிலிட்டு எரித்தாள். சில மாதங்கள் கழித்து அவள் கிறிஸ்துமஸ் மரத்துக்கு விளக்குகள் பொருத்திக்கொண்டிருந்த போது, கிறிஸ்துமஸ் மரம் தீப்பிடித்து அவளை அதே இடத்தில் எரித்துப்

போட்டது. பாருங்கள், நீங்கள் எதை விதைக்கிறீர்களோ, அதையே அறுப்பீர்கள், “நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள்”. பாருங்கள்?

10. தேவனுடைய வார்த்தையைக் குறித்து ஒரு காரியம். அங்கு விபத்து நேர்ந்த அவர்கள்; சாத்தான் அவர்களுடைய பொருட்களை அழிக்க முயன்றான். நான் இதைக் கூறும் போது, அவர்கள் எழுந்து நின்று, யாரோ ஒருவர் உள்ளே வருவதற்காக இடங்கொடுப்பதைக் காண்கிறேன். அவர்களுடைய வாகன இணைப்பு வண்டி (trailer) அந்த அறையிலிருந்த எல்லாமே எரிந்து சம்பலாகி விட்டன. நான் அங்கு சென்று கண்டேன். அங்கு எரியாமலிருந்தவை ஆசீர்வதிக்கப்பட்ட வேதாகமமும். என் புத்தகமும், சகோ. ஆஸ்பார்னின் புத்தகமும் என்று நினைக்கிறேன். மற்றவை அனைத்துமே அந்த இணைப்பு வண்டியில் எரிந்து சாம்பலாகி யிருந்தன. நான் வேதாகமத்தை கையிலெடுத்த போது, அது வெளிப்புறத்தில் சிறிது புகைந்து கொண்டிருந்தது. கர்த்தருக்கு சித்தமானால், என்றாகிலும் ஒரு நாள் அந்த வேதாகமத்தை, பிரசங்க பீடத்துக்கு கொண்டு சென்று, “வானமும்

பூமியும் ஒழிந்து போகும், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" என்னும் பொருளின் பேரில் பேச விரும்புகிறேன் என்று அந்த சகோதரனிடமும் சகோதரியிடமும் கூறினேன். எல்லாமே போய்விட்ட பிறகு, வார்த்தை இன்னும் அங்குள்ளது. **தேவன் தமது வார்த்தையை எவ்வளவு கவனமாகப் பாதுகாக்கிறார் என்பது மிகவும் அற்புதமல்லவா? இந்த வார்த்தை உங்களுக்குள் வர நீங்கள் அனுமதிப்பீர்களானால், அவர் உங்களையும் கவனமாகப் பாதுகாப்பார்.** அது உண்மை.

***செய்தி:*** தேவன் எங்களோடே இருந்தால் இந்த அற்புதங்களெல்லாம் எங்கே, டிசம்பர் 31, 1961

★★★★★

# சகோதரி பிரான்ஹாம் சுகம் பெறுதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

24. அது நான்காம் முறை நிகழ்ந்தது. உங்களிடம் ஒன்றைக்கூற விரும்புகிறேன். நான் உண்மையை அப்படியே கூறவேண்டும். ஏறக்குறைய பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு, நான் சகோ. ஜான் ஷரிட் என்பவருடன் கலிபோர்னியாவில் இருந்தேன். நான் அங்கு ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. நானும் மேடாவும், சகோதரன், சகோதரி ஷாரிட்டும் ஒரு ஓட்டலில் தங்கியிருந்தோம். அப்பொழுது பால் மாலிக்கி என்னும் பெயர் கொண்ட ஒருவர் - அவர் அநேகமுறை இந்த கூடாரத்திற்கு வந்திருக்கிறார். அவர் மிகுந்த செல்வம் படைத்த ஆர்மீனியர். அவருடைய மனைவிக்கு கலிபோர்னியாலிலுள்ள ஃபிரெஸ்னோவில் குழந்தை பிறந்தது. அவர்கள் இங்கு வசித்து வந்தனர்... அவர் மனைவியைக் கூட்டிக் கொண்டு என்னைக்காண ஒட்டலுக்கு வந்திருந்தார், அவர், "சகோ. பிரான்ஹாமே, நான் மனைவியை மேலே கொண்டு வரலாமா?" என்று கேட்டார். நான், "சரி, கொண்டு வாருங்கள்" என்றேன் (அடுத்த நாள் நான் காடலினாவுக்குச் செல்ல விருந்தேன்),

எனவே அவர் மனைவியை மேலே அழைத்து வந்தார். அவள் வியாதியாயிருந்தாள்.

அவள்..... நான், “சகோதரி மாலிக்கி, உன் கையை: என் கையின் மேல் போடு. கர்த்தர் நம்மிடம் உரைக்கிறாரா என்று பார்க்கலாம்” என்றேன். அவள் தன் கையை என் கையின் மேல் போட்டவுடனே, நான், “ஓ, அது பால் கால் (Milk leg)” என்றேன் (பால் கால் என்பது பிரசவம் கழிந்தவுடன் கால்களில் உண்டாகும் வீக்கம் - தமிழாக்கியோன்).

25. அவள், “அற்கான அறிகுறிகள் எதுவும் எனக்கு இருப்பதாக தெரியவில்லையே” என்றாள்.

நான், “நீ கவனித்து வா” என்றேன். இரண்டு நாட்களுக்குள், மருத்துவர்கள் அவளுக்கு பால் காலுக்காக கிசிச்சை செய்தனர்.

இங்குள்ள ஜிம்மி பூலின் சிறு குழந்தையைப் போன்று. அன்றொரு நாள் அவர்கள் மாரடைப்பு என்று நினைத்துக கொண்டு என்னிடம் வந்தார்கள். அது ஆஸ்துமா இழுப்பாக இருந்தது. என் கையை அவன் மேல் போட்டு, “அவனை இரண்டுநாட்களுக்கு கவனித்து வாருங்கள். அவனுக்கு விளையாட்டு அம்மை (measles) உள்ளது, அது எழும்பி வரப்போகின்றது. அதற்கான ஜுரம் அவனுக்கு இப்பொழுது உள்ளது” என்றேன். நான் சென்ற இரவு ஜிம்மி

பூலைச் சந்தித்தேன். அவர், “அவன் உடல் பூராவும் விலையாட்டு அம்மை தோன்றியுள்ளது” என்றார்.

நான் சகோதரி மாலிக்கியிடம் அவளுடைய கையைக் குறித்து பேசிக்கொண்டிருந்தேன், அவள், “சகோ. பிரான்ஹாமே அது மிகவும் அதிசயமான காரியம். அது எல்லா கைகளிலும் கிரியை செய்யுமா?” என்று கேட்டாள்.

நான், “அவர்களுக்கு வியாதி இருக்குமானால்” என்றேன். நான், “இங்கே என் கையை ... போடுகிறேன். (அநேகர் அதை கவனித்தீர்கள்). ஒன்றும் நேரிடாது” என்று கூறி விட்டு, “பாருங்கள், என் மனைவிக்கு எந்த வியாதியும் இல்லை ... உன் கையை என் மேல் போட்டுக் கொள்கிறேன், பாருங்கள்” என்றேன் (என் மனைவி அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தாள்). அவள் தன் கையை என் கை மேல் போட்டாள். அவள் போட்டவுடன், நான், “உன் இடது கருப்பையில் ஒரு வீக்கம் (Cyst) எழும்பியுள்ளது. உனக்கு பெண்களுக்கு ஏற்படும் கோளாறு உள்ளது” என்றேன்.

அவள், “அப்படி ஒன்றும் எனக்குத் தோன்றவில்லையே” என்றாள்.

நான், "ஆனால் உனக்கு இருக்கிறது" என்றேன். என் மகள் பெக்கிக்கு இப்பொழுது இரண்டு வயது - சற்று முன்பு பியானோ இசைத்தவள். அதற்கு இரண்டு வருடங்கள் கழித்து சாராள் பிறந்தாள். அவள் அறுவையின் மூலம் பிறந்தாள் (Caesarean). நான் கார்ட்டனிலுள்ள எங்கள் மருத்துவர், டாக்டர் டில்மனிடம், "அவளுடைய வயிற்றை அறுத்து திறக்கும் போது, அவளுடைய இடது கருப்பையை கவனியுங்கள்" என்றேன். அவர் பார்த்து விட்டு, "நான் ஒன்றையும் காணவில்லையே" என்றார். என் கையை அவள் கை மேல் போட்டு பார்த்தேன். அது அப்பொழுதும் அங்கிருந்தது.

நான்கு ஆண்டுகள் கழித்து ஜோசப் பிறந்தான். நான் மறுபடியும் மருத்துவரிடம் பார்க்கக் கூறினேன். அவர், "நான் ஒன்றும் காணவில்லையே" என்றார். என் கையைப் போட்டேன் -- அது அப்பொழுதும் அங்கிருந்தது. நாங்கள் அதைக் குறித்து மறந்தே போய் விட்டோம்.

26. நான் இதை கூறியே ஆகவேண்டும். இதை கூற எனக்கு விருப்பமில்லை. ஆனால் உண்மையை சொல்ல வேண்டும், பாருங்கள்,

அதுதான் உங்களுக்கு அவசியம். என்ன நடந்த போதிலும் எப்பொழுதும் உண்மையையே கூறுங்கள்.

ஆண்டுகள் கழிந்தன, நாங்கள் கவனம் செலுத்தவேயில்லை. இதை நான் கூறுகிறேன் -- அவள் இங்கு இல்லாததனால் இதை கூறுகிறேன், அவள் இங்கு இருப்பதனால் அல்ல. என் மனைவியைக் காட்டிலும் சிறந்த மனைவி இவ்வுலகில் இருக்க முடியாது என்பது என் கருத்து. அவள் எப்பொழுதும் அதே விதமாக இருப்பாள் என்று நம்புகிறேன். நானும் அவளுக்கு விசுவாசமுள்ள கணவனாக இருக்க விரும்புகிறேன். இந்த கட்டிடத்திலுள்ள வாலிபர் ஒவ்வொருவரும் மணம் புரிந்து கொள்ளும் போது, என் மனைவியைப் போன்ற ஒரு மனைவியைப் பெற்றுக் கொள்வார்களென நம்புகிறேன். நாங்கள் எவ்வளவு காலம். அவ்வாறு வாழ்வோம்.. என்று எனக்குத் தெரியாது. நாங்கள் இவ்வுலகில் இனிமேலும் வாழப் போகும் நாட்கள் முழுவதிலும் என்று நம்புகிறேன் நாங்கள் ஒன்றாக மிக்க மகிழ்ச்சியுள்ளவர்களாயிருக்கிறோம்.

**அவளை மணந்து கொள்ள தேவன் தான் என்னிடம் கூறினார்.** அதே சமயத்தில் அவளை மணந்து கொள்ளாதிருக்க நான் முயன்று

வந்தேன் (அவளுக்கு அது தெரியாது). அவளை நான் நேசிக்காததனால் அல்ல, அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்து கொடுக்க முடியாது என்று நான் கருதின காரணத்தினால் தான். அவள் மிகவும் அருமையானவள், நான் அதற்கு தகுதியற்றவன் என்று எண்ணினேன். அவள் ஜெபம் செய்ய புறப்பட்டுச் சென்று வேதாகமத்தை திறந்தாள் .... அவள் "இதை நான் முன்பு செய்ததில்லை, ஆனால் எனக்கு உதவி செய்ய ஒரு வேதவசனத்தை அளிப்பீராக. அவரை நான் மறக்க வேண்டுமானால், நான் மறந்து தான் ஆக வேண்டும்" என்றாள். அவள் ஒரு சிறு கொட்டகைக்கு சென்று ஜெபம் செய்து விட்டு வேதாகமத்தை திறந்த போது, "இதோ, நான் தீர்க்கதரிசியாகிய எலியாவை அனுப்புகிறேன்!" என்று மல்கியா 4ல் உரைக்கப்பட்டுள்ள வேதவசனத்தை அவள் கண்டாள், அது சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு. இந்த நாளின் ஊழியத்தைக் குறித்து அப்பொழுது ஒன்றுமே தெரியாது.

**நான் அங்கு ஆற்றங்கரையில் படுத்துக் கொண்டிருந்தேன். அவர் ஒரு இரவு என்னை எழுப்பினார். அவர் வாசற்படியில் நின்று கொண்டு பேசுவதைக் கேட்டேன். அவர், "நீ**

**சென்று, அவளை மனைவியாக அடைந்து கொள். உன் விவாகம் வரும் அக்டோபர் மாதம் இருபத்து மூன்றாம் தேதி நடைபெறும்" என்றார், நான் அவர் கூறினபடியே செய்தேன்.** நாங்கள் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறோம். தேவனுடைய கிருபையினால் எங்களிடையே சண்டை எழுந்ததில்லை. அவள் இதயத்திற்கு இனியவளாக இருந்து வருகிறாள்.

ஒரு நாள் நான் வீட்டுக்குள் நுழைந்தேன். நான் ஊழியத்திற்கு சென்று விடுவதால், அவள் பிள்ளைகளை தனியாக வளர்த்து வருகிறாள். அநேக பெண்கள் அதை பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். உங்களுக்கு அது தெரியும்..... அது மிகவும் கடினம்..... நான் உள்ளே நுழைந்த போது, அவள் ஏதோ ஒன்றை கூறிவிட்டாள். எங்களுக்கு ஜோசப் இருந்தான். அவன் துடுக்கான பையன்! அவனுடைய தாயின் தலையிலும், என் தலையிலும் சில நரைமயிர் தோன்ற அவன் காரணமாயிருந்தான். அவன் உண்மையில் துடுக்கான பையன். அவன் மிகவும் மோசமான ஒன்றை செய்து விட்டான். நான் அவளிடம்.... அவள் என்னிடம். "பில், அவனை அடியுங்கள்" என்றாள். நான், "எனக்கு போதிய தைரியமில்லை" என்றேன்.

அவள், “உங்களுக்கு அது நேர்ந்திருந்தால் தெரிந்திருக்கும்” என்று சொல்லி விட்டு ’படார்’ என்று கதவை என் முகத்தில் மூடினாள்,

அது பரவாயில்லை என்று நினைத்துக் கொண்டேன். அந்த ஏழை பையன் அதை வேண்டுமென்று செய்யவில்லை. நான் காரைக் கழுவுவதற்காக வெளியே சென்றேன், நான் வெளியே சென்ற போது, அந்த சம்பவம் பரிசுத்த ஆவியானவருக்கு பிடிக்கவில்லை. அவர் “நீ போய் அவளிடம் சொல்...” என்றார், அது 2 நாளாகமம், 22ம் அதிகாரம் என்று நினைக்கிறேன். நான் ஒருக்கால் கற்பனை செய்கின்றேனோ என்று முதலில் நினைத்தேன். நான் காரைக் கழுவிக் கொண்டிருந்தேன். அவர் மறுபடியும் என்னிடம், “அதை படிக்கும்படி அவளிடம் சொல்” என்றார். நான் உள்ளே சென்று, வேதாகமத்தை கையிலெடுத்து அதைப் படித்தேன். அந்த வேதபாகத்தில் தான் தீர்க்கதரிசினியாகிய மிரியாம், தன் சகோதரன் மோசே எத்தியோப்பிய ஸ்திரீயை விவாகம் செய்து கொண்டதால் பரியாசம் செய்ததைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. தேவனுக்கு அது பிடிக்கவில்லை. அவர், “அவள் அப்படி செய்ததைக் காட்டிலும் அவள் தகப்பன்

அவள் முகத்திலே காறித் துப்பியிருந்தால் நலமாயிருக்கும்" என்றார் (எண். 12:14).

27. எனவே மிரியாமுக்கு மேலெல்லாம் குஷ்டம் பிடித்தது. ஆரோன் அவனுடைய சகோதரியிடம் வந்து..... அவனுடைய சகோதரனிடம், "அவள் குஷ்ட ரோகத்தினால் மரித்துக் கொண்டிருக்கிறாள்" என்றான். மோசே அவளுக்காக பரிந்து பேசுவதற்காக பலிபீடத்தண்டை ஓடினான். அப்பொழுது அக்கினி ஸ்தம்பம் இறங்கி வந்தது - தேவன். அவர் "நீ மிரியாமையும் ஆரோனையும் இங்கு அழைத்துக் கொண்டுவா" என்றார். ஆரோனும் இதில் ஈடுபட்டிருந்தான். எனவே அவர், அவர்களை இங்கு வரும்படி அழைத்து வா என்றார்.

அவர், "உங்களுக்குள்ளே ஒருவன் (தேவன் இப்பொழுது அவர்களிடம் பேசுகின்றார்) ஆவிக்குரியவனாக அல்லது தீர்க்க தரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் என்னை அவனுக்கு வெளிப்படுத்துவேன். நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன், சொப்பனத்தை வெளிப்படுத்தித் தருவேன்" என்றார் (எண். 12:6), அவர், "என் தாசனாகிய மோசேயோ - அவனைப் போல் தேசத்தில் ஒருவனும் இல்லை, அவனுடைய

காதில் உதடுகளை வைத்து பேசுகிறேன். உங்களுக்கு தேவனிடத்தில் பயமில்லையா?" என்றார். பாருங்கள், தேவனுக்கு அது பிடிக்கவில்லை.

அதை நான் கண்டபோது, நான் உள்ளே ஓடிச் சென்றேன். அவள் வேறொரு அறையில் இருந்தாள். நான் கதவைத் தட்டினேன் (அவள் கதவை அடைத்திருந்தாள். நான் அவளிடம் பேச விரும்புவதாக கூறினேன். நான் உள்ளே சென்று அவளிடம் பேசி, அது என்னவென்று அவளிடம் கூற முனைந்தேன். நான், "இதயத்துக்கு இனியவளே, உன்னை நான் எவ்வளவாக நேசிக்கிறேன் என்று உனக்குத் தெரியும். ஆனால் தேவனுக்கு அது பிடிக்கவில்லை. நீ அப்படி சொல்லியிருக்கக் கூடாது" என்றேன். உடனே அவளுக்கு பக்கவாட்டில் கோளாறு ஏற்பட்டது.

நாங்கள் லூயிலில்லிலுள்ள மருத்துவரிடம் அவளைக் கொண்டு சென்றோம் (டாக்டர் ஆர்தர் ஷோன் என்பவர்). அவர் இடது கருப்பையில் ஒரு கட்டியை (tumor) கண்டுபிடித்தார் - நான் பதினைந்து, பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு கண்டு பிடித்த ஒன்றை இடது கருப்பையில் 'வால் நாட்' கொட்டை (Walnut) அளவுக்கு ஒரு கட்டி,

நான், "டாக்டர், அதைக் குறித்து என்ன?" என்று கேட்டேன்.

அவர், "என்ன நடக்கிறதென்று பார்க்கலாம். சில மதங்கள் கழித்து அவளை மறுபடியும் கொண்டு வாருங்கள்" என்றார் (ஏறக்குறைய இரண்டு மாதங்கள் கழித்து).

நாங்கள் அவளை மறுபடியும் கொண்டு சென்றோம். அது 'வால் நட்' கொட்டை அளவிலிருந்து எலுமிச்சம் பழம் அவுவுக்கு பெரிதாக வளர்ந்திருந்தது. அவர், "அது வெளியே வந்து விடுவது நல்லது. அது மிருதுவாகி, புற்று நோயாக மாறி விடும்" என்றார்.

நான், "அப்படியா? நாங்கள் டூசானுக்குச் செல்கிறோம், கர்த்தர் என்னை டூசானுக்கு அனுப்புகிறார்" என்றேன்.

அவர் பெண்களின் வியாதிகளுக்கான சிறப்பு மருத்துவரிடம் அவளை அனுப்பினார் (அவர் தமது கைகளில் வைத்துக் கொள்ள விரும்பவில்லை) இவர் அவரிடம் என்னுடைய ஊழியத்தைக் குறித்து கூறியிருக்க வேண்டும். ஏனெனில் அந்த சிறப்பு மருத்துவர், "அது வெளியே வந்தே ஆக வேண்டும்" என்றார். எனவே அவர் கூறினார்...... நாங்கள் டூசானுக்குச்

செல்வதாக அவரிடம் கூறினோம். அவர், “அங்கு ஒரு சிறப்பு மருத்துவர் இருக்கிறார். அவர் எனக்கு நெருங்கிய நண்பர்” என்றார். இவர் இதற்கு முன்பு டூசானில் வசித்து வந்தார். அவர், “உங்களை நான் அவரிடம் அனுப்பப்போகிறேன்” என்றார். எனவே அவர் குறிப்பு ஒன்றை எழுதி அவருக்கு அனுப்பி, “திருமதி பிரான்ஹாம் நல்லவர்கள்” என்று ஆரம்பித்து தொடர்ச்சியாக எழுதிக் கொடுத்து, அந்த கட்டியின் அளவைக் குறிக்கும் படமொன்றையும் அனுப்பினார் (அது அப்பொழுது கட்டியாக மாறியிருந்தது). அவர், “அவரை அறிவேன்...” என்று எழுதினார். அவருக்கு என்னைத் தெரியும்...... அவர் என்னை “தெய்வீக சுகமளிப்பவர்” என்று குறிப்பிட்டிருந்தார் என்று நினைக்கிறேன் (அவ்வளவு தான் அவருக்கு என்னைக் குறித்து எழுத தெரியும்). நான், “அது கட்டாயமாக வெளியே எடுக்கப்பட வேண்டுமானால், எடுத்து விடுங்கள். அதற்கு நான் சம்மதம் தெரிவிக்கிறேன்” என்றேன். அது எங்கள் விசுவாசம் சோதிக்கப்படுதலாம்

28. நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வந்தோம். நாங்கள் அதிகமாக ஜெபிக்குந்தோறும், அந்த கட்டி பெரிதாக வளர்ந்து கொண்டே வந்து, முடிவில் அது பக்கவாட்டில் வெளியே தள்ளிக்கொண்டு

வந்தது. நாங்கள் அதை இரகசியமாக வைத்திருந்து (இங்குள்ள ஒரு சிலருக்கு மாத்திரமே அது தெரியும்), என்ன நேரிடுகிறதென்று கவனித்து வந்தோம். நாட்கள் அவ்வாறே கடந்து சென்றன.

முடிவில் நான் கனடாவிலிருந்து திரும்பி வந்த போது....... அங்கு இந்திய பழங்குடியினரை கிறிஸ்துவிடம் நடத்த கர்த்தர் கிருயை செய்தார் (கர்த்தருக்கு சித்தமானால், அவர்களுக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்க, நான் மறுபடியும் வசந்த காலத்தின் போது அங்கு செல்வேன்). நான் திரும்பி வந்த போது, அவளுக்குச் செல்ல சமயம் வந்தது - நான் நியூயார்க்கிலிருந்த போது; இல்லை, இங்கிருந்த போது ..அவளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட அல்லது கடைசி முறையாக மருத்துவ பரிசோதனை செய்யப்பட சமயம் வந்தது. நான் நியூயார்க்குக்கு சென்றிருந்தேன். நான் திரும்பி வரும் வழியில், இந்த இடத்திற்கு வந்து. அங்கு சென்றேன் ... இங்கு கூட்டத்தை நடத்தி முடித்த பின்பு - கடைசி கூட்டத்தை - நான் சகோ. உட் வீட்டிற்கு சென்று அங்கிருந்து அவளைத் தொலைபேசியில் கூப்பிட்டேன். அவள், “பில், துணிகள் அதன் மேல் பட்டாலும் கூட, என்னால் வேதனை பொறுக்க முடியவில்லை”

என்றாள், அது அவளுடைய பக்கவாட்டிலிருந்து வெளியே இப்படி பிதுங்கி வந்திருந்தது. அந்த பக்கத்திலுள்ள அவளுடைய கால்- அவள் நொண்டி நடந்தாள். அதுவே அவளுக்கிருந்த மிகவும் மோசமான வாரம், அவள் அங்கு உட்கார்ந்து கொண்டு, நான் தொலைபேசியில் பேசுவதைக் கேட்டாள் - அவளுக்கிருந்த மிகவும் மோசமான வாரம்.

29. அவள், “நான் நாளை மறு நாள் மருத்துவ பரிசோதனைக்குச் செல்ல வேண்டும்” என்றாள்.

நான், “ஓ, தேவனே, அவர்கள் அறுவை சிகிச்சை செய்தால், கிறிஸ்துமஸின் போது நாங்கள் வீட்டிற்கு செல்லாதபடி அது தடுத்து விடும். அப்பொழுது நான் அங்கிருப்பேன் என்று ஜனங்களிடம் கூறி விட்டேனே” என்று நினைத்தேன். “என்ன ஒரு நேரம்... ஓ, என்னே” என்று எண்ணினேன். “அவர் அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமானால், கிறிஸ்துமஸ் கழியும் வரைக்கும் அதை நீட்டி வைக்கும்படி அவரிடம் கூறலாமா” என்று நினைத்தேன். பிறகு நான் யோசித்தேன்; ஒருக்கால் அது புற்று நோய் கொண்டதாக இருக்குமானால், அது தீங்கு விளைவிப்பதாயிருக்கும். அது சிறுநீரகத்தில் பரவி, அதுவும் புற்று நோய் கொண்டதாக மாறி

அவளைக் கொன்று விடும். "நான் என்ன செய்வேன்?" என்று எண்ணினேன்.

மேடா, "சரி, பிறகு என்னை தொலைபேசியில் கூப்பிடுங்கள்" என்றாள், நான் ஷ்ரீவ்போர்ட்டை அடையும் அன்று (அதாவது அதற்கடுத்த நாள்) அவள் மருத்துவ பரிசோதனைக்குச் செல்ல வேண்டும். எனவே அவள்... திருமதி நார்மன் அவளுடன் கூட சென்றாள். உங்கள் எல்லாருக்கும் திருமதி நார்மனைத் தெரியும் - இந்த கூடாரத்துக்கு வருபவர்களுக்கு. என் மனைவியை இவள் சிறப்பு மருத்துவரிடம் கூட்டிச் செல்வது வழக்கம். எனவே என் மனைவி. "முதல். இரவு கூட்டம் முடிந்து திரும்பி வந்தவுடன் என்னை தொலைபேசியில் கூப்பிடுங்கள். ஏனெனில் இவ்விரண்டு இடங்களுக்கும் இடையே நேரத்தில் வித்தியாசம் உண்டு (இரண்டு மணிநேரம். இப்பொழுது நான் என்ன செய்யவேண்டுமென்று உங்களிடம் கூறுகிறேன்" என்றாள்.

நான், "சரி" யென்றேன்,

30. எனவே நான் புறப்பட்டு சென்றேன். அடுத்த நாள் காலை அந்த இடத்தை விட்டுச் செல்வதற்கு முன்பு, நான் பில்லியோடும்

லாயிசோடும் தொடர்பு கொள்ள எத்தனித்தேன். அவர்களிருவரும் இப்பொழுது இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர். எப்பொழுதுமே.... எங்களிடம் சகோ. பாமர் எங்களுக்கு மெத்தை தைத்துக் கொடுத்த ஒரு பழைய 'ஸ்டூல்' (Stool) உள்ளது. (ஸ்டூல்' என்பது ஒருவர் உட்காரக் கூடிய இருக்கை அதற்கு நாற்காலிக்கு இருப்பது போல் பின்னால் சாய்ந்து கொள்வதற்கு ஒன்றுமிராது - தமிழாக்கியோன்). நாங்கள் எப்பொழுதுமே அந்த 'ஸ்டூல்ச் சுற்றிலும் ஒன்று சேர்ந்து ஜெபம் செய்வது வழக்கம்.... மெத்தை தைத்த ஸ்டூல். நான் கூட்டங்களுக்குச் செல்லும் போது, நாங்கள் அதைச் சுற்றிலும் ஒன்று சேர்ந்து தேவன் எங்களுக்கு உதவி செய்யும்படி ஜெபிப்போம்.

நான் அங்கு சென்று இரண்டு நாட்கள் ஆயின. எனக்குத் தனிமை உணர்வு ஏற்பட்டது. வீட்டிலே... பிள்ளைகள் சென்று விடுவார்கள், அவளும் சென்றுவிடுவாள். ஒரு காலத்தில் எனக்கு அப்படிப்பட்ட அனுபவம் உண்டாயிருந்தது என்று உங்களில் அநேகருக்குத் தெரியும் - யாருமில்லாத வீட்டுக்குச் செல்லுதல். என் மனைவி ஹோப்பை நான் மாத்திரம் அடக்கம் செய்தேன். நான் .... அந்த நிலை மீண்டும் வருகிறது. நான் வீடு திரும்பினவுடன், "நான்

ஜெபம் செய்து, பிறகு பில்லியையும் லாயிசையும் கூட்டிக் கொண்டு செல்வேன்" என்று நினைத்தேன்.

நான் ஜெபம் செய்யத் தொடங்கின போது, "கர்த்தாவே, இன்று காலை இதைச் சுற்றிலும் அவர்கள் இல்லை. அவர்களுக்கு நீர் உதவி செய்து அவர்களை ஆசிர்வதிப்பீராக. நாங்கள் எல்லோரும் மறுபடியும் இந்த இடத்திற்கு வரும்படி அருளும்" என்றேன். நான், "அவர்கள் வேறு இடத்தில் இருப்பதன் காரணம், ஒரு தரிசனத்தின் மூலம் நீர் என்னை அங்கு அனுப்பினீர். அதை நிறைவேற்றிவிட்டீர். அடுத்தபடியாக நான் என்ன செய்ய வேண்டுமென்று நீர் கூறப் போகின்றீர் என்பதைக் காண நான் காத்திருக்கிறேன். அவளுக்கு நீர் இரங்கவேண்டுமென்று ஜெபிக்கிறேன். அங்கு நடக்கவிருக்கும் கூட்டத்தில் எனக்கு உதவி செய்வீராக" என்று இவ்வாறு தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே சென்றேன். நான், "அது புற்றுநோயாக மாற விடாதேயும். அதை எடுத்துவிட, மருத்துவர் அடுத்த ஆண்டு முதலாம் தேதிக்கு பிறகு வரை காத்திருக்கட்டும். அவளை இந்நிலையில் காண எனக்கு விருப்பமில்லை ...." என்றேன். நான் மேலும், "கர்த்தாவே, அன்று காலை அவள் அதை வேண்டு மென்று செய்யவில்லை. அவள் அப்படி செய்ய

வேண்டுமென்று நினைக்கவில்லை. கர்த்தாவே, நான் கூட்டங்களுக்கு செல்வதைக்குறித்தும், கூட்டங்களின் நிமித்தம் அநேக மாதங்கள் வெளியில் தங்குவதைக் குறித்தும் அவள் ஒரு முறையாவது ஒரு வார்த்தையும் கூட கூறினதில்லை - அது எதுவாயிருந்தாலும் அவள் ஒரு முறை கூட வாயைத்திறந்து ஒன்றும் கூறினதில்லை. அவள் எப்பொழுதுமே சலவைக்கு என் துணிகளை அனுப்பி, என் "ஷர்ட்டுகளை அவளே துவைத்து, நான் கூட்டத்திற்கு செல்வதற்காக எல்லாவற்றையும் ஆயத்தம் செய்து வைப்பாள். இவைகளைச் செய்த பிறகும், அவள் எவ்வாறு தேவனை சேவிப்பது என்று யோசிப்பாள்" என்றேன், **ஸ்திரீகளே, உங்கள் கணவருக்கு சேவை செய்யும் போது, நீங்கள் தேவனுக்கு சேவை செய்கின்றீர்கள்.** நிச்சயமாக. இப்பொழுது..... பிறகு நான் களைப்புடன் வீடு திரும்புவேன். ஜனங்கள் எல்லாவிடங்களிலுமிருந்தும் வருவார்கள், நான் எங்காவது மீன் பிடிக்கும் பயணத்தையோ, வேட்டை பயணத்தையோ மேற்கொள்ள வேண்டி வரும், அந்நிலையில் அநேக பெண்கள் கோபம் கொண்டிருப்பார்கள். இவள் என்ன செய்தாள்? என் வேட்டை உடைகளை எனக்காக ஆயத்தப்படுத்தி

என்னைப் போக விட்டாள். நான், "கர்த்தாவே, அவள் வேண்டுமென்று செய்யவில்லை. அவளுடைய பிரசவம் அறுவை சிகிச்சையின் மூலம் நடத்தப்பட்டதால், மூன்று முறை அவளுடைய வயிற்றை அறுத்து திறக்க வேண்டியதாயிற்று. அவளுக்கு மீண்டும் அறுவை சிகிச்சை நடப்பதைக்காண நான் விரும்பவில்லை" என்றேன்.

அப்பொழுது என் அறையில் ஒரு சத்தத்தைக் கேட்டேன். நான் மேலே நோக்கின போது ஒரு சத்தம், "எழுந்து நில்" என்றது. "**நீ என்ன கூறினாலும், அதன்படி நடக்கும்**" என்றது.

நான் ஒரு நிமிடம் அமைதியாயிருந்தேன். "**மருத்துவரின் கை அவளைத் தொடுதற்கு முன்பு, தேவனுடைய கரம் அந்த கட்டியை எடுத்துப்போட்டு, அது காணாமலிருப்பதாக**" என்றேன்.

என்னைப் பொறுத்த வரையில், அத்துடன் அது முடிந்து விட்டது. அவளை நான் தொலைபேசியில் கூப்பிடவில்லை, நாங்கள் தொடர்ந்து கூட்டங்களை நடத்தினோம். நான்

சென்று பில்லியையும் லாயிசையும் அழைத்துக் கொண்டு, ஷ்ரீவ் போர்ட்டுக்குச் சென்றேன்.

31. அடுத்த நாள் இரவு அவளை நான் தொலை பேசியில் கூப்பிட்டேன். அவள் மகிழ்ச்சி கொண்டாள். அவள், "பில், உங்களிடம் ஒன்றைக் கூற விரும்புகிறேன்..." என்றாள். (அவள் இங்கிருக்கிறாள். அது உண்மையென்று அவள் ருசுப்படுத்த முடியும்). அவள் நொண்டிக் கொண்டே மருத்துமனைக்கு செல்ல வேண்டிய தாயிருந்தது. அவள் நர்ஸ¯டனும் திருமதி நார்மனுடனும் அறைக்குள் சென்று, பரிசோதனைக்காக மேலாடையை [gown] உடுத்துக் கொண்டாள். அவளால் எழுந்து மேசையின் மேல் படுக்க முடியவில்லை, அந்த கட்டி இவ்வளவு பெரிதாக தொங்கிக் கொண்டிருந்தது. அவள் ..... மருத்துவர் அறைக்குள் நுழைந்து அவளுடன் பேசிக் கொண்டிருந்தார். அவளைத் தொட்டு பரிசோதனை செய்வதற்காக பரிசோதனை மேசையை உயர்த்தி பரிவாக்கினார். அவர் தொடுவதற்கு முன்பே அது மறைந்து விட்டது. கட்டி எந்த பக்கம் இருந்தது என்று மருத்துவருக்கு தெரியவில்லை.

32. அவர், "ஒரு நிமிடம் பொறுங்கள்" என்றார். அவர் வரைபடங்களுடனும்,

படங்களுடனும் தேடின போதும், அதன் சிறிதளவையும் கூட அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை. அவர் மீண்டும் மீண்டும் அவளை பரிசோதனை செய்தார். அவர், "**என்னால் இதற்கு விளக்கம் தர இயலாது. ஆனால், திருமதி பிரான்ஹாமே, அந்த கட்டி அங்கு இல்லை**" என்றார். அதன் பிறகு அவளுக்கு அதற்கான எந்த அறிகுறியும் இருக்கவில்லை

அது என்ன? கவனியுங்கள், அது சொன்ன விதமாகவே நிறைவேறினது: "மருத்துவரின் கை அதை தொடுவதற்கு முன்பு." ஒரு வினாடிக்குள் அவருடைய கை அதை தொட்டிருக்கும். தேவனுடைய வார்த்தை எவ்வளவு பிழையற்றதாயுள்ளது!


என் மனைவி இங்கு இருக்கிறாள். நாங்கள் இருவரும் தேவனுடைய சமுகத்தில் இருக்கிறோம். மருத்துவரின் கை அவளுடைய சரீரத்தைத் தொடுவதற்கு முன்பு- அது அவளிடம் இப்படி வந்து கொண்டிருந்தது - ஏதோ ஒன்று சம்பவித்தது. கட்டி அவளை விட்டுப் போய் விட்டது. அவர்களால் அதை கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் இவ்வாறு கூறினார் - அப்படித்தான் நினைக்கிறேன், இல்லையா இருதயத்துக்கு இனியவளே? "திருமதி பிரான்ஹாம்,

உங்களிடம் மீண்டும் உறுதிபடுத்த விரும்புகிறேன்" அப்படித்தானே அவர் சொன்னார்? சரி "அந்த கட்டி ஆங்கில்லை. உங்களுக்கு கட்டியே இல்லை" அது என்ன? கர்த்தருடைய வார்த்தையின்படி பிழையின்றி அப்படியே நிறைவேறுதல். ஆமென்.

***செய்தி:*** பார்வையைத் திருப்பி இயேசுவை நோக்கிப் பாருங்கள், டிசம்பர் 29, 1963

★★★★★





3. The Branham family group. To the right are Billy Paul, Becky and Brother Branham's wife, Meda Marie.


Happy New Year
2021



# Happy New Year 2021!

*Only believe,*
*Only believe*
*All things are possible,*
*Only believe.*

சகோ. பினேகாஸ்
போன்: 8838623242,
9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in